**PRESS NOTE**

A case was registered on 17.10.2021 in Pudukottai V&AC Cr.No.04/2021 u/s 13 (2) r/w 13(1) (e) of the PC Act-1988 and 109 IPC and 13(2) r/w 13 (1) (b) and 12 of prevention of Corruption Act-1988 as amended in 2018 against Tr.C.Vijayabhaskar, S/o Chinnathambi, MLA of Viralimalai Assembly Constituency, 14/28-1, Sowrashtra Street, Iluppur, Pudukottai District and his wife Tmt.Ramya w/o Tr. C.Vijayabhaskar on the basis of credible information that during the period between 01.04.2016 to 31.03.2021, while he was serving as Minister for Health and Family welfare Department, Government of Tamil Nadu, Tr.C.Vijayabhaskar has intentionally enriched himself and accumulated assets in his name, in the name of his family members and in the name of business firms in which he is proprietor/share holder to the tune of Rs.27,22,56,736/- which is disproportionate to his known sources of income and taken up for investigation. In continuation of investigation, today 18.10.2021, search is conducted in 50 places (Pudukottai – 32, Chennai – 8, Trichy – 4, Coimbatore - 2, Chengalpattu – 2, Kanchipuram – 1 and Madurai – 1) including the residence of Tr. C.Vijayabhaskar, his family members and close relatives, friends and business partners, offices of the business firms in which he is proprietor/ share holder and in the educational institutions which are run by a Trust administered by the family of Tr. C.Vijayabhaskar.

During the search, net cash of Rs.23,85,700/-, 4870 gms (4.87 Kgs) of gold articles, RC books of 136 Goods vehicles and other property documents were identified and the cash Rs.23,85,700/-, 10 Hard Discs and other incriminating documents pertaining to the case have been seized. Further investigation is going on.

# பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்ட மன்றத் தொகுதி உறுப்பினர் மற்றும் தமிழக அரசின் முன்னாள் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.சி.விஜயபாஸ்கர், தான் பொது ஊழியராகப் பணிபுரிந்த 01.04.2016 முதல் 31.03.2021 வரையிலான காலக்கட்டத்தில் தனது பெயரிலும், தனது குடும்ப உறுப்பினர்கள் பெயரிலும் தான் பங்குதாரராக உள்ள நிறுவனங்கள் பெயரிலும் வருமானத்திற்கு அதிகமாக ரூ.27,22,56,736/– அளவில் சொத்து சேர்த்துள்ளதாக கிடைக்கப்பெற்ற நம்ப தகுந்த தகவல்களின் அடிப்படையில் புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண். 04/2021 சட்டப்பிரிவுகள் 13(2) உ/இ 13(1)(e) ஊழல் தடுப்புச்சட்டம் 1988 மற்றும் 109 இ.த.ச மற்றும் சட்டப்பிரிவுகள் 13(2) r/w 13(1)(b), 12 திருத்தியமைக்கப்பட்ட ஊழல் தடுப்புச்சட்டம் 2018இன் படி 17.10.2021 அன்று திரு.சி.விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி திருமதி.ரம்யா ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று 18.10.2021 திரு.சி.விஜயபாஸ்கர் மற்றும் அவருடைய நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொழில் பங்குதாரர்களின் வீடு மற்றும் அலுவலகங்களிலும், அவரது குடும்ப உறுப்பினர்கள் நிர்வகிக்கும் அறக்கட்டளை மூலமாக நடத்தப்பட்டு வரும் கல்வி நிறுவனங்களிலும் சேர்த்து மொத்தம் 50 இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. (புதுக்கோட்டை–32, திருச்சி–4, மதுரை–1, கோயம்புத்தூர்–2, காஞ்சிபுரம்–1, செங்கல்பட்டு–2 மற்றும் சென்னை–8).

இச்சோதனையில் பணம் ரூ.23,85,700/–, தங்க நகைகள் 4870 கிராம் (4.87 கிலோ), 136 கனரக வாகனங்களின் பதிவு சான்றிதழ்கள் மற்றும் சொத்து பரிவரித்தனை தொடர்பான ஆவணங்கள் கண்டறியப்பட்டு, வழக்கிற்கு தொடர்புடைய பணம் ரூ.23,82,700/–, 19 ஹார்டு டிஸ்குகள் மற்றும் முக்கியமான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.